அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 7

| | |
|---|---|
| நேரம்: 150 மணித்துளிகள் | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| நாள்: 04.06.2022 | பக்கங்கள்: 16 |

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை
   1. இருநூற்றுப்பதினாறு
   2. நூற்று இருபத்தாறு
   3. இருநூற்று நாற்பத்தேழு
   4. இருநூற்றுப்பதினேழு

2. வினைமுற்றாக வருவது
   1. வந்த
   2. மாணவன்
   3. வருவான்
   4. வா

3. பதினெட்டு என்பதைப் பிரித்தெழுதினால்
   1. பத்து + எட்டு
   2. பதி + எட்டு
   3. பதின் + எட்டு
   4. பதி + னெட்டு

4. வட ஈழத்தில் சுடுமண் நாணய அச்சுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களுள் ஒன்று
   1. பூநகரி
   2. அநுராதபுரம்
   3. அம்பாறை
   4. புத்தளம்

5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன
   1. அடைமொழிகள்
   2. இடைச்சொற்கள்
   3. உரிச்சொற்கள்
   4. சொல்லிய உறுப்புகள்

6. நெல்வயல் என்பது
   1. இயல்புப்புணர்ச்சி
   2. திரிதற்புணர்ச்சி
   3. தோன்றற்புணர்ச்சி
   4. கெடுதற்புணர்ச்சி

1 2 3 4

7. தாயகத்தில் போர் நடைபெற்ற போதும் மாணவர்கள் கல்வி கற்பதை நிறுத்தவில்லை. இதில் நிறுத்தவில்லை என்பது
   1. வினையெச்சம்
   2. உடன்பாட்டுவினை
   3. எதிர்மறைவினை
   4. ஏவல் வினை

8. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அதியுச்சக் கண்டுபிடிப்பு
   1. வானொலி
   2. தொலைக்காட்சி
   3. இணையம்
   4. தொலைபேசி

9. ஈழத்தில் அரச உருவாக்கத்திற்கான காலம் எனக் கூறப்படுவது
   1. நுண்கற்காலம்
   2. பெருங்கற்காலம்
   3. சங்ககாலம்
   4. ஐரோப்பியர் காலம்

10. ஒன்றுபட்டால் உண்டு
   1. வாழ்வு
   2. வால்வு
   3. வாழ்வ்வு
   4. வாள்வு

11. ஆவல், விருப்பம், அவா போன்ற பொருள் தரும் ஒரு சொல்
   1. சினம்
   2. ஆசை
   3. வாய்மை
   4. எண்ணம்

12. "அரிது அரிது மானிடராதல் அரிது" என மாந்தப் பிறப்பின் சிறப்பைக் கூறியவர்
   1. திருவள்ளுவர்
   2. அன்னை திரேசா
   3. ஔவையார்
   4. விபுலாநந்த அடிகள்

13. குழலி மேடையில் ஆடினாள். இதில் வந்துள்ள வேற்றுமை உருபு
   1. இன்
   2. ஆள்
   3. ஐ
   4. இல்

1 2 3 4

14. மலையும் மலை சார்ந்த இடமும்
    1. முல்லை
    2. குறிஞ்சி
    3. மருதம்
    4. நெய்தல்

15. இயற்கை எழிலை நயந்தேன். எழில் என்பதன் ஒத்தபொருட் சொல்
    1. அழகு
    2. உவகை
    3. அன்பு
    4. தோற்றம்

16. தமிழரது உணவின் சிறப்புத்தன்மையாகக் கருதப்படுவது
    1. உறைப்புக் குறைவாக இருப்பது
    2. அறுசுவையும் மருத்துவக் குணங்களும் கலந்திருப்பது
    3. காய்கறிகளை மட்டும் உண்பது
    4. சமைக்காமல் உண்பது

17. மொழிக்கு இறுதியில் வரும் வினாவெழுத்துகள்
    1. எ, இ
    2. ஆ, ஓ
    3. எ, யா
    4. ஏ, ஐ

18. கற்றான் என்னும் இறந்தகால வினைமுற்றை எதிர்காலமாக்கினால்
    1. கற்கிறான்
    2. கற்கின்றான்
    3. கற்பான்
    4. கற்பித்தான்

19. இந்தியப் படைக்கு எதிராக ஈழத்தில் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தவர்களுள் ஒருவர்
    1. அங்கயற்கண்ணி
    2. அன்னை பூபதி
    3. மாலதி
    4. இசைப்பிரியா

20. அடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு
    1. கன்னங்கரிய
    2. தடதட
    3. இன்பதுன்பம்
    4. தேடித்தேடி

(20 x 1 = 20 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.**

1. **கரை**

பெயர்: ______________________________

வினை: ______________________________

2. **மடி**

பெயர்: ______________________________

வினை: ______________________________

(2 x 2 = 4 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.**

| வினையடி | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| படி | | |
| நட | | |
| ஓடு | | |

(6 x 1 = 6 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வன்னியை ஆண்ட மன்னர்கள் இருவரின் பெயர்களை எழுதுக.

2. மாந்தரது அடிப்படைத் தேவைகள் எவை?

3. தமிழரது மூதாதையர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

4. சமூக வலைத்தளங்களின் பயன்கள் இரண்டு எழுதுக.

5. சுட்டெழுத்துகள் எவை?

6. விருப்புச்சொல்லிய வகைகள் எவை?

7. நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**5. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அப்பா என்றும் நல்லவராம்
அறிவு தரவே வல்லவராம்
தப்புச் செய்தால் தண்டிப்பார்
சரியைச் செய்தால் அணைத்திடுவார்

உழைத்தே உழைத்தே எம்குடும்பம்
உயர வழியைச் செய்பவராம்
களைத்தே இளைத்து வந்தாலும்
கடமை செய்யக் கருதுவராம்

\- கவிஞர் இ. நாகராசன்

1. அப்பா எதில் வல்லவர்?

________________________________

2. அப்பா எப்பொழுது தண்டிப்பார்?

________________________________

3. எதைச் செய்தால் அப்பா அணைப்பார்?

________________________________

4. அப்பா உழைத்து உழைத்து எதை உயரச் செய்வார்?

________________________________

5. அப்பா எப்படிப்பட்டவர்?

________________________________

(5 x 1 = 5 புள்ளிகள்)

6. தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

ஆங்கிலம்:

1. Our homeland is full of beauty.
2. The trees are green in summer.
3. Social media outlets connect people around the world.
4. Maran won the first place in the race.
5. Tamils follow their culture with pride.

யேர்மனி:

1. Unsere Heimat ist voller Schönheit.
2. Im Sommer sind die Bäume grün.
3. Soziale Medien verbinden die Menschen aus aller Welt.
4. Maaran erzielte beim Wettrennen den ersten Platz.
5. Die Tamilen bewahren ihre Tradition mit Ehre.

நோர்வே:

1. Hjemlandet vårt er vakkert.
2. Trærne er grønne om sommeren.
3. Sosiale medier binder verdensbefolkningen sammen.
4. Maran fikk første plass på løpekonkurransen.
5. Tamilene setter kulturen deres høyt.

இத்தாலி:

1. La nostra patria è piena di bellezze.
2. D'estate gli alberi sono verdi.
3. I social network connettono le persone del mondo.
4. Maaran ha vinto il primo posto nella gara di corsa.
5. I Tamil preservano altamente la loro cultura.

நெதர்லாந்து:

1. ons moederland is mooi.
2. In de zomer zijn de bomen groen.
3. Sociale websites verbinden mensen over de hele wereld.
4. Maaran won de eerste plaats tijdens de sprint.
5. Tamils waarderen hun tradities enorm en houden deze goed in stand.

டென்மார்க்:

1. Vores fædreland er smukt.
2. Om sommeren er træerne flotte.
3. Sociale medier knytter menneskene.
4. Maaran fik første plads i løbekonkurrence.
5. Tamiler sætter deres kultur højt.

சுவீடன்:

1. Vårt hemland är fylld med skönhet
2. På sommaren är träden gröna.
3. Människor i världen kan ansluta sig.
4. Maaran kom i första plats i löptävlingen.
5. Tamiler värnar sin kultur.

பின்லாந்து:

1. Meidän kotimaa on kaunis.
2. Kesällä puut ovat vihreitä.
3. Sosiaalinen media yhdistää maailman ihmiset.
4. Maran tuli ensimmäisenä juoksukilpailussa.
5. Tamilit pitävät heidän omaa kulttuuriaan korkealla.

தமிழ்:

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5 x 1 = 5 புள்ளிகள்)

**7. பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. வன்னி
2. பொதுப்பணி
3. மழைநாள்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- காலநிலை
- பார்த்த காட்சிகள்
- நினைவுகள்

(15 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இயற்கையின் படைப்புகளுள் மலர்கள் மிகமிக அழகு நிறைந்தவை. அவை மனத்திற்கு இன்பம் தருபவை; பல்வேறு நிறங்களாலும் நறுமணத்தாலும் அனைவரையும் கவர்கின்றன. மக்கள் வாழ்வியலில் மலர்கள் சிறப்பிடம் பெறுகின்றன. தாயகத்தில் தாமரை, அல்லி, குவளை போன்ற நீர்மலர்களும் மல்லிகை, முல்லை, செவ்வரத்தை போன்ற நிலமலர்களும் மலர்கின்றன. தாயகத்தில் மலரும் மலர்களுள் கார்த்திகைப்பூவும் ஒன்று. பழந்தமிழர் இம்மலரைக் காந்தள் என்று அழைத்தனர். இது அழகிய விரல்கள் போலவும் சுடர்கள் போலவும் காட்சியளிக்கும். இது ஈழத்தமிழரின் எழுச்சித் திங்களாகிய கார்த்திகையில் மலர்கின்றது; தேசிய நிறங்களைக் கொண்டிருக்கின்றது. அதனால், எங்கள் தமிழீழத் தேசிய மலராக சிறப்புப் பெறுகிறது.

1. இயற்கையின் படைப்புகளுள் மிகமிக அழகு நிறைந்தவை எவை?

   ________________________________________

2. மலர்கள் எவற்றால் அனைவரையும் கவர்கின்றன?

   ________________________________________

3. கார்த்திகைப்பூ எப்பொழுது மலர்கின்றது?

   ________________________________________

4. பழந்தமிழர் கார்த்திகைப்பூவை எவ்வாறு அழைத்தனர்?

   ________________________________________

5. கார்த்திகைப்பூ ஏன் எங்கள் தேசியமலராக விளங்குகின்றது?

   ________________________________________

   ________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

2. அழைப்பிதழை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

## திலீபன் தமிழ்ச்சோலையின் வெள்ளிவிழா

அன்புடையீர்!

தமிழ்ச் சிறார்களுக்குத் தாய்மொழியையும் கலையையும் பண்பாட்டையும் கற்பிக்கும் நாம், எமது வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளோம்.

**நிகழ்வுகள்:**

- மங்கல விளக்கேற்றல்
- வரவேற்புரை
- நாடகம், வில்லுப்பாட்டு, தமிழிசை, பட்டிமன்றம்
- உரைகள்
- தமிழ்த்திறன் போட்டி மதிப்பளிப்புகள்
- நன்றியுரை

**இடம்:** திலீபன் தமிழ்ச்சோலை, இத்தாலி

**காலம்:** **09.04.2022** சனிக்கிழமை 09:00 மணிமுதல்

**தொடர்புகளுக்கு:** **0039 302 701 47 15**

அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**ஒழுங்கமைப்பு:** திலீபன் தமிழ்ச்சோலை

1. திலீபன் தமிழ்ச்சோலையின் வெள்ளிவிழா நடைபெற்றது. (  )
2. இவ்விழாவில் கூத்தும் நடைபெற்றது. (  )
3. இவ்விழா சனிக்கிழமை நடைபெற்றது. (  )
4. நிகழ்வுகளில் பட்டிமன்றமும் ஒன்றாகும். (  )
5. கலைத்திறன் போட்டி மதிப்பளிப்புகள் வழங்கப்பட்டன. (  )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 04 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |